# <u>சித்திரங்குடி</u>
## பறவைகள் சரணாலயம்







Written & Captures
**Gopinath Murugesan**

சித்திரங்குடி - பலருக்கு தெரியாத சிலருக்கு தெரிந்த ஓர் அழகிய பறவைகள் சரணாலயம். பொங்கல் விடுமுறையில் தான் முதல் முதலில் கண்ணன் அண்ணாவுடன் அங்கு சென்றேன்..!! கண்ணன் பாபு அண்ணா ஓர் நல்ல மனம் கொண்ட மனிதர் மற்றும் புகைப்படகலைஞர், முதல் முதலின் அவரை கோவையில் ஓர் விழாவில் சந்தித்தேன். இருவரும் அறிமுகம் ஆனோம், பேசிய சிறுது நேரத்தில் அவருடையும் நட்பு என்னக்கு இறுதிவரை வரும் என்று ஒரு உணர்வு, இதை நான் இதற்கு முன் அப்துல்லா மற்றும் அசோக் அண்ணாவிடம் உணர்ந்து இருக்கிறேன். மதுரைக்கு வரும் பொது புகைப்படம் எடுக்க செல்லலாம் என்று பேசிக்கொண்டும், அதே போல் பொங்கல் விடுமுறையில் புகைப்படம் எடுக்க பறவைகளை தேடி ஓர் பயணம்.

அதிகாலை நான்கு மணிக்கு செல்லலாம் என்று முடிவு செய்தோம், அம்மாவிடம் என்னை அதிகாலை நான்கு மணிக்கு எழுப்பிவிட சொன்னேன். ஆனால் அவள்ளோ மூன்று மணிக்கு என்னக்கு முன் எழுந்து விட்டு தேனீரும், வெந்நீரும் போட்டு வைத்தால். அம்மா என் அன்புக்குரிய ரசிகை, என் சந்தோஷத்திற்காக பல தியாகங்கள் செய்தவள். என்ன தவம் செய்தேனோ அவள் வயிற்றில் பிறந்ததுக்கு.

பயணம் தொடங்கியது..!!




அழகிய நாள் மற்றும் என் வாழ்வில் மறக்க முடியாத ஓர் அனுபவம் முதல் முறையாக பறவைகளை மட்டும் புகைப்படம் எடுக்க சென்றேன், என் சின்ன கண்மணியை கையில் எடுத்து கொண்டு.

சித்திரங்குடி - மதுரையில் இருந்து ராமநாதபுரம் செல்லும் வழியில் முதுகுளத்தூர் அருகே உள்ளது, ஓர் அழகிய கிராமம். சுமார் 100 கிலோமீட்டர் மதுரையில் இருந்து. அருகே பரமக்குடி, சாயல்குடி உள்ளது.

ஏழு மணி அளவில் சித்திரங்குடி சென்று அடைத்தோம், ஆர்வமாக கேமராவை எடுத்தோம் கிடைத்ததோ ஏமாற்றம் நினைத்தபடி பறவைகளை காணவில்லை எனினும் எங்களுக்குள் புலம்பிக்கொண்டு, சிரித்துக்கொண்டு சுற்றுப்புறத்தில் உள்ள அழகை புகைப்படம் எடுத்துக்கொண்டோம்.

புகைப்படக்காரனுக்கு பொறுமையும், நம்பிக்கையும் தான் அவசியம். அதனால் மீண்டும் ஒரு முறை ஓர் அழகிய தருணத்தில் வந்து எடுத்துக்கொள்ளலாம் என்று மதுரையை நோக்கி பயணத்தை தொடர்தோம்.




எப்பொழுதும் என் கண்களில் ஈரமும், சோகமும் கலந்து இருக்கும் என்னக்கு கடவுள் எப்பொழுதும் சில சில அழகிய நாட்களை தருவார். அப்படி ஓர் அழகிய நினைவுள்ள தருணைத்தை தந்த கடவுளும், கண்ணன் அண்ணாவுக்கும், என் அம்மாவுக்கும் நன்றி.

முடிந்தால் வாசிக்கும் நீங்களும் ஒரு முறை சென்று வாருங்கள் ஓர் அழகிய அனுபவம் கிடைக்கும்..!!